# பனிமயம்

டிசம்பர் 2024

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, வணக்கம். நலந்தானா?

நவம்பர் மாதத்தில் சிறப்பான விதத்தில் நம்மோடு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தவர்களை நினைவு கூர்ந்தோம். “வாழும்போது நேசித்தோம், மரித்தாலும் மறவோம்” என்பதை நவம்பர் மாத்தில் நீங்கள் உண்மையாக்கினீர்கள். அதிகமான திருப்பலி கருத்துக்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காக நம் பேராலயத்தில் நவம்பர் மாதத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக உத்தரிக்கும் ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆன்மாக்களின் இளைப்பாற்றிக்காகவும், மறக்கப்பட்ட குருக்கள் கன்னியர்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் நீங்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்தது உங்களுடைய பிறர் சிநேகத்தை சுட்டிக்காட்டக் கூடியதாக அமைந்தது. கடந்த மாதத்தில் சொன்னதை மீண்டும் நினைவூட்டுகிறேன் “மரித்தவரையும் நினைவு கூர்வோம், நம்மோடு வாழ்வோரையும் நேசித்து அவர்களுக்கான கடமைகளைச் செய்வோம்”.

டிசம்பர் மாதம் வந்தாலே கூடவே நம் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவும் நினைவுக்கு வந்துவிடும். நவம்பர் மாதத்திலிருந்தே நம் பேராலயப் பங்கு மக்கள் பலரும் பல விதங்களில் பல ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். பனிமயம் வாசகர்களாகிய நீங்கள் அனைவருமே கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்வோடு கொண்டாட திட்டமிட்டுக் கொண்டிருப்பீர்கள். “இயேசு நம்மைத் தேடி வந்தார்” “கடவுள் நம்மோடு” என்பதுதான் கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் மைய சிந்தனைகளாகும். இச்சிந்தனைகளை இம்மாதத்தில் சிறப்பாக செயல்படுத்த முனைவோம்.

இயேசு நம் துயரினைப் போக்க நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க நம்மைத் தேடி வந்தது போல இன்று நாம் நம்மோடு வாழும் ஏழையரின், ஆதரவற்றோரின் துயரினைப் போக்க அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க அவர்களைத் தேடிச் செல்ல வேண்டும். டிசம்பர் மாதத்தில் அதிகமாக ஆதரவற்ற இல்லங்களைத் தேடிச் சென்று அங்குள்ளவர்களோடு நேரத்தை செலவிடுங்கள். பொருளாதார உதவிகள் செய்யுங்கள். இவ்வாறு அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுங்கள். இப்படிப்பட்ட அறச்செயல்களைச் செய்வாரோடு கடவுள் உடனிருக்கிறார் என்பதை மறவாதீர்கள்.

அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்பு பெருவிழா நல்வாழ்த்துகளும், ஆசியும்.

God Bless You All.

அன்பும், ஆசீரும்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை



உதயம் 26 தாரகை 4

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


**இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து**

**எதிர்நோக்குத் திருப்பயணிகளுக்காக...**

இந்த யூபிலி ஆண்டு நமது நம்பிக்கையை வலுப்படுத்தி, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நமது அன்றாட வாழ்வில் அடையாளம் காணவும், அது நம்மைக் கிறிஸ்தவ எதிர்நோக்குத் திருப்பயணிகளாக மாற்றவும் நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...


1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . 4
   அருள்பணி. குமார்ராஜா
2. பிறக்கு முன்பே வரலாறு படைத்தவர்! . . . . . . . . 6
   கலாபன் வாஸ்
3. நூற்றுக்கு நூறு . . . . . . . . . . . . . . . . . . . . . . . 8
   சி. ஜாக்சன்
4. இறைநம்பிக்கை . . . . . . . . . . . . . . . . . . . . . . 10
   பவுல் ராஜ்
5. இதுதான் கிறிஸ்துமஸ் . . . . . . . . . . . . . . . . . 12
   ம. வெனான்சியுஸ்
6. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . 13
7. நான் நானாகத்தான் . . . . . . . . . . . . . . . . . . . 14
   ஜோ. ரெஜினா கிரகோரி
8. ஊனம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 16
   பனிமய சுகந்தி
9. விவிலியப்போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 17
10. 2024 கிறிஸ்து பிறப்பு கால சிறப்பு நிகழ்வுகள் . . 20
11. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . . 22

மரியன்னையின் திருப்பெயர்கள்

# 13 வணக்கத்துக்குரிய கன்னி



அன்னை மரியாவை "வணக்கத்துக்குரிய கன்னி" (Virgin Most Venerable) என்று வாழ்த்துகிறது லொரெட்டோ மன்றாட்டு மாலை. அனைவரின் வணக்கத்துக்கும் உரியவரே **நம்** அன்னை. அவரே தூய ஆவியாரால் தூண்டப்பட்டு, "எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்பர்" (லூக் 1:48) என்று பாடினார் அல்லவா?

பொதுவாக, வயதில் மூத்தவர்களுக்கும், மரியாதைக்குரியவர்களுக்கும் வணக்கம் செலுத்த வேண்டும் என்பது நமது மரபு. இதை விவிலியத்திலும் காண்கிறோம். தோபித்தின் மகனான தோபியா தம் உறவினரான கபேலைக் கண்டபோது அவருக்கு "வணக்கம் தெரிவித்தார்" (தோபி 9:6).

எஸ்தர் நூலில் வரும் மொர்தக்காய் ஆமானுக்கு வணக்கம் செலுத்தவில்லை. "தனக்கு மொர்தக்காய் வணக்கம் செலுத்தாததை அறிந்த ஆமான் கடுஞ்சீற்றங் கொண்டான்" (எஸ்(கி) 3:5).

புதிய ஏற்பாட்டில் "சந்தை வெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதை விரும்புகிற" (மாற்கு 12:38) மறைநூல் அறிஞர்களை இயேசு கண்டித்தார். மேலும், மறைத்தூதுப் பணிக்குத் தம் சீடரை அனுப்பியபோது "பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம். வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்" (லூக் 10:4) என்று அறிவுறுத்தினார்.

ஆனால், அன்னை மரியாவோ அனைவரின் வணக்கத்துக்கும் உரியவராக இருக்கிறார் என்று திருஅவைத் தந்தையர் போதிக்கின்றனர். அதற்கான காரணங்களையும் வரிசைப்படுத்தியுள்ளனர்.

**1. பழைய ஏற்பாடு** அன்னை மரியாவை வணக்கத்துக்குரியவராகக் காட்டுகிறது. தொடக்க நூலில் பாம்பை நசுக்கும் பெண்ணாக அன்னை முன்மொழியப் பட்டுள்ளார். எசாயா இறைவாக்குரைத்த எஸ்ஸேயின் தளிராகவும் (எசா 45:8), கடவுளின் முழுமையான அன்புக்குரிய கன்னியாகவும் (இபா 4:9), அரசரின் வலப்புறம் நிற்கும் அரசியாகவும் (திபா 44:10) பழைய ஏற்பாடு அவரை முன் நிறுத்துகிறது.

**2. புதிய ஏற்பாடு** மரியாவை அருள் நிறைந்தவராகவும், பெண்களுள் பேறு பெற்றவராகவும் (லூக் 1:28) காட்டுகிறது. அவர் தூய ஆவியாரால் நிழலிடப்படுபவராகவும், ஆட்கொள்ளப்பட்டவராகவும் இருக்கிறார். திருவெளிப்பாடு நூல் காட்டும் பன்னிரு விண்மீன்களை முடியாகச் சூடிய பெண்ணும் (திவெ 12:1) மரியாவே.

**3. திருஅவையின் திருமரபும்** மரியாவை வணக்கத்துக்குரியவராக அடையாளம் காட்டுகிறது. அவர் இறைவனின் தாய், முப்பொழுதும் கன்னி, பிறப்புநிலைப் பாவமின்றிப் பிறந்தவர், உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டவர் என்னும் மறையுண்மைகளை நெடுங்காலமாகப் பறைசாற்றியதன் வாயிலாக மரியன்னைக்கு வணக்கம் தெரிவிக்கிறது நம் திருஅவை. ★

# 14 போற்றுதற்குரிய கன்னி



மரியன்னையைப் பன்முகப் பெயர்களால் வாழ்த்தும் லொரெட்டோ மன்றாட்டு மாலை அவரைப் போற்றுதற்குரிய அன்னை (Virgin Most Admirable) என்றும் போற்றுகிறது. இந்தப் பெயரைப் புரிந்துகொள்ள நாம் விவிலியத்தைப் புரட்டிப் பார்க்க வேண்டும். யாரெல்லாம் போற்றுதற்குரியவர்கள் என்னும் கேள்விக்கு இறைமொழி பலவித விடைகளைத் தருகிறது.

முதன்முதலில் கடவுள்தான் போற்றுதற்குரியவர் என்னும் வியப்பான செய்தி சாமுவேல் இரண்டாம் நூலில் காணப்படுகிறது. "**போற்றுதற்குரிய** ஆண்டவரை நோக்கி நான் மன்றாடினேன். என் எதிரிகளிடமிருந்து நான் மீட்கப்பட்டேன்" (2 சாமுவேல்-22:4) என்று வாசிக்கிறோம். அத்தகைய கடவுளால் உலகம் தோன்றுவதற்கு முன்னரே தேர்ந்தெடுக்கப் பட்டவர் மரியா. எனவே, அவரும் போற்றுதற்குரியவரே.

இதன் தொடர்ச்சியாகக் கடவுளின் மகனான இயேசுவும் போற்றுதற்குரியவரே என்று புதிய ஏற்பாடு சுட்டுகிறது. "மனிதர் என்னும் முறையில் கிறிஸ்துவும் அவர்களிடமிருந்தே தோன்றினார். இவரே எல்லாவற்றுக்கும் மேலான கடவுள்; என்றென்றும் **போற்றுதற்குரியவர்**. ஆமென்" (உரோ 9:5) என்று புகழ்கிறார் பவுலடியார். அந்த இயேசுவைக் "கருத்தாங்கி, பாலூட்டி வளர்த்த" தாயான மரியாவும் போற்றுதற்குரியவரே (லூக் 11:27) என்பது திருஅவையின் பார்வை.

"கடவுளுக்கும் மனிதருக்கும் அன்புக்குரியவரானார்" என்று சீராக்கின் ஞானநூல் பாராட்டும் மோசேயின் "நினைவு போற்றுதற்குரியது" (சீஞான 45:1) என்பது பழைய ஏற்பாட்டில் இயேசுவின் முன்னோடியான மோசே பெறுகிற புகழ்மொழி. அந்த மோசேயைவிடப் பெரியவரான இயேசுவின் தாயின் நினைவும் போற்றுதற்குரியது என்பது சொல்லாமலே விளங்கும்.

மேற்கண்டவர்களைத் தவிர, ஒரே ஒரு பெண்ணைத்தான் போற்றுதற்குரியவர் என்று விவிலியம் அழைக்கிறது. யார் அவர்? ஒரே நாளில் தம் ஏழு மைந்தர்களும் கொல்லப்பட்டதைக் கண்டபோதிலும், ஆண்டவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையால் அனைத்தையும் மிகத் துணிவோடு தாங்கிக் கொண்ட தாய். யூத நம்பிக்கைக்காகத் தம் உயிரைக் கையளித்த ஏழு சகோதரர்களின் அன்னையே அவர். "எல்லாருக்கும் மேலாக, அவர்களுடைய தாய் மிகவும் **போற்றுதற்குரியவர்**, பெரும் புகழுக்குரியவர்" (2 மக் 7:20) என்று பாராட்டுகிறது மக்கபேயர் இரண்டாம் நூல்.

பெயர் சொல்லப்படாத இந்தத் தாய் அன்னை மரியாவுக்கு முன்னோடி என்கின்றனர் திருஅவைத் தந்தையர். சிலுவையடியில் நின்று தம் ஒரே மகன் தம் உயிரைக் கையளிக்க ஊக்குவித்த வீரத் தாய் மரியா. அவரே மறைசாட்சியர் அனைவருக்கும் ஊக்கம் தந்து மறை சாட்சியரின் அரசி என்றும் புகழப்படுகிறார். எனவே, அவரைப் போற்றுதற்குரியவர் என்பது பொருத்தமே.



அருள்பணி. குமார்ராஜா



# பிறக்கு முன்பே வரலாறு படைத்தவர்!

கிறிஸ்துமஸ் காலத்தில் அதிகமாக ஒலிக்கும் மணிகள், கடையில் கல்லாப் பெட்டிக்கு முன் இருப்பவைதாம்! விழாக் காலமாயிற்றே! பரிசுப் பொருள்கள், கண்ணைப் பறிக்கும் உடைகள், அலங்காரப் பொருள்கள், இப்படியாக விற்பனை விறுவிறுப்பாக நடக்கும் காலமல்லவா! இவைகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணமான முக்கியத்துவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நாம் மறந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லலாமே!

**கிறிஸ்துமஸ் என்றாலே, கிறிஸ்துதான் முன்னணியில்** இருக்க வேண்டும். ஆனால், நமக்குப் பலகாரங்களும், கெரால்களும், தோரணங்களும், பலூன்களும், மத்தாப்பு வெடிகளும், காஞ்சிபுரங்களும், குர்தி, லெகங்கா, போச்சப்பள்ளி, பின்னிகளும் வந்து நிற்கின்றன!

இந்த இன்ப நாளில், இதன் கதாநாயகனான, கிறிஸ்துவைப் பற்றிச் சற்று சிந்திப்போமா?

* * *

அவர், தமது பிறப்பினால், காலங்களை இரு கூறுகளாகப் பிரித்து விட்டார். அவர் எப்போது பிறந்தார் என்பது பிரச்சனையல்ல... எப்போது அவர் பிறந்தாரோ, அதனை நடுநாயகமாக வைத்து, **'கிறிஸ்துவுக்கு முன்'** (கி.மு.) என்றும், **'கிறிஸ்துவுக்குப் பின்'** (கி.பி.) என்றும் வரலாற்று ஏடுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

அவருடைய பிறப்பு, மனித வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைக் கொடுத்துள்ளது. **'விலையில்லா மீட்பு' என்பதுதான் அவருடைய வாழ்க்கைத் தத்துவம்.**

அவர், உலக வழக்கிற்கு மாறுபட்ட முறையில் மனிதப் பிறவி எடுத்தவர். வறுமையில் மறைந்து வாழ்ந்தார். நீண்ட நெடுந் தொலைவிற்கு அவர் பயணம் செய்யவில்லை. இளமையில், ஒரே ஒரு முறை மட்டுந்தான், தாம் வாழ்ந்த நாட்டின் எல்லையைத் தாண்டியிருக்கிறார்.

அவரிடம் பணம் இருந்ததில்லை. மேலிடத்துச் செல்வாக்கும் இருந்ததில்லை! அவருடைய உறவினர்கள் பிரபலமான வர்களல்லர், கல்வி கற்றவர்களுமல்லர்!

அவருடைய மழலைப் பருவத்தில் அரசன் ஒருவனை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். இளம் சிறுவனாக, வேத விற்பன்னர்களைத் திகைக்கச் செய்தார். முழு மனிதனாக உருவானபின் இயற்கையின் அசைவுகளை ஆணையிட்டு அடக்கினார்! பேரலைகள்மீது, தரையில் நடப்பதுபோல் நடந்தார். சீறிப் பாய்ந்த அலைகடலைக் கண்ணுறங்கச் செய்தவர்!

கணக்கற்றவர்களைப் பணமில்லாமலே - மருந்தில்லாமலே குணப்படுத்தினார்!

அவர், ஒரு புத்தகம்கூட எழுதியதில்லை - எனினும், அவரைப் பற்றி எழுதப்பட்ட எல்லாப் புத்தகங்களையும் எந்த ஒரு தனிப்பட்ட நூலகமும் தன்னுள் அடக்கிக் கொள்ள முடியவில்லை!

அவர், ஒரு பாடலும் புனைந்ததில்லை! எனினும், கவிஞர்கள் எல்லாரும் சேர்ந்து உருவாக்கிய, வேறு எந்தக் கருப்பொருளையும் விட, அவர் ஒருவரே கணக்கற்ற கவிதைகளின் கருப்பொருளாக இருந்து வருகிறார்.

அவர், எந்தக் கல்லூரியையும் நிறுவியதில்லை. எனினும், அனைத்துலகக் கல்விக் கூடங்களில் உள்ள மாணவர்களை ஒட்டு மொத்தமாக நிறுத்தினாலும், அவருடைய மாணாக்கர்களுக்கு ஈடாகாது.

அவர், மருத்துவம் பயின்றதில்லை. எனினும், எல்லா மருத்துவர்களையும் விட, மேலதிகமாக, உடைந்த உள்ளங்களைக் குணப்படுத்தினார்.

சக்கரவர்த்திகளும், பேரரசர்களும், மாவீரர்களும் வந்தார்கள் - போனார்கள்!

அவர்களின் பெயர்கூட நினைவில் இல்லை! ஆனால், இவருடைய பெயர் நாளுக்கு நாள் ஓங்கி வளர்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும், இன்னும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

✶ ✶ ✶

அவர் பிறக்குமுன்னே, அவருடைய வரலாற்றை எழுதச் செய்தவர்!

இதோ சான்றுகள் –

❖ **கிறிஸ்துவின் வருகை – இறைவாக்கு**

தானியேல் 9:25 – "எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மெசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்".

**நிறைவு** : மாற்கு 1:14-15. "இயேசு கலிலேயாவிற்கு வந்து கடவுள் அருளிய நற்செய்தியை அறிவிக்கலானார்" – காலம் நிறைவேறிற்று!

❖ **பெத்லகேமில் பிறப்பு**

**இறைவாக்கு** : மீக் 5:2 – "பெத்லகேமே – இஸ்ராயலை ஆளப் போகிறவர் உன்னிலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதி நாள்களாகிய பூர்வத்தினுடையது."

**நிறைவு** : மத்தேயு 2:1 – "யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்திருக்க......"

❖ **யூத இனத்திலிருந்து கிறிஸ்து**

**இறைவாக்கு** : ஆதியாகமம் 49:10 – "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை. நியாயப் பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்."

**நிறைவு** : எபிரேயர் 7:14 – "நம்முடைய ஆண்டவர் யூதாவின் மரபில் தோன்றினார் என்பது தெரிந்ததுதானே."

❖ **ஈசா தாவீது குலத்திலிருந்து**

**இறைவாக்கு** : இசையாஸ் 11:1 – "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அதன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்"

**நிறைவு** : திருவெளிப்பாடு 22:16 – "தாவீதின் வேரும் வழித்தோன்றலும் நானே"

❖ **மரியா அவருடைய கன்னித் தாய்**

**இறைவாக்கு** : இசையாஸ் 7:14 – "ஒரு கன்னி கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள்"

**நிறைவு** : மத்தேயு 1:13-23 – "....இதோ! கன்னி கருத்தாங்கி மகனைப் பெற்றெடுப்பாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர் என்று ஆண்டவர் இறைவாக்கினர் வாயிலாகக் கூறியது அனைத்தும் நிறைவேறும்படியே இவையனைத்தும் நிகழ்ந்தன"

❖ **அவருடைய தெய்வீகப் பணி**

**இறைவாக்கு** : எசாயா 61:1 – "ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார்."

**நிறைவு** : லூக்காஸ் 4:16-21 – "அவர்.... நாசரேத்திற்கு வந்தார். இசையாஸ் எழுதிய இறைவாக்கினரின் ஏட்டுச் சுருளை அவரிடம் கொடுத்தனர்...... அப்போது அவர், 'நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று' என்று கூறலானார்."

✶ ✶ ✶

கிறிஸ்து .............. நேற்றும், இன்றும், நாளையும் மாறாதவர்.



**கலாபன் வாஸ்**

*(1975ஆம் ஆண்டில் எழுதியதால், பழைய திருவிவிலிய இறைவார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது)*

# நூற்றுக்கு நூறு



அரையாண்டு தேர்வுக்காலம் நெருங்கி விட்டது. மாணவ மாணவியர்களின் எண்ணமெல்லாம் மதிப்பெண்களை ஒட்டியே இருக்கும். இதுவும் ஏறக்குறைய ஒரு மதிப்பெண் கதைதான். தனது தேர்வின் மூலமாக ஒரு பெண்ணின் மதிப்பு என்ன என்பதை இறைவன் உலகம் அறிய செய்த கதை.

இறைவன் வைத்த தேர்வில் அவர் நம்பியவர்களே தேர்ச்சிக்கான மதிப்பெண்களை தவறிய போது, ஒரு பெண் தேர்ச்சி பெற்ற கதை. அதுவும் நூற்றுக்கு நூறு பெற்ற கதை. இதில் சாதனை என்னவென்றால் அவரைத் தவிர யாருக்கும் நூற்றுக்கு நூறு கிடைக்கவில்லை என்பதுதான்.

ஒரு ஆசிரியராக யாராவது ஒருவர் தன்னிடம் நூற்றுக்கு நூறு பெறும்போது அந்த ஆசிரியரின் மனம் அடையும் மகிழ்ச்சியை போல முடிவில் மகிழ்ச்சியை இறைவன் அடைந்த நாள் நமது அன்னையின் பிறப்பு நாள் என்றால் அது மிகையல்ல.

ஆம்! கீழ்படிதலுக்கான தேர்வில் ஆதி பெற்றோர் தோற்றுப்போக சாவான பாவம் மனித இனத்தை பற்றிக் கொண்டது. அன்னை மரியாவின் கீழ்படிதல் மனித இனத்தை மீட்டது என்பது உலகம் அறிந்த ஒன்று. ஆனால் இறைவனின் முடிவிலா மகிழ்ச்சிக்கான காரணம் அது மட்டுமல்ல சாவான பாவமின்றி அன்னை பிறப்பெடுத்தது தான்.

ஒவ்வொரு ஆண்டும் அன்னை கன்னி மரியாவின் அமல உற்பவப் பெருநாளைக் டிசம்பர் மாதம் எட்டாம் நாள் கொண்டாடுகின்றோம். 'அன்னை கன்னி மரியா அமல உற்பவி' என்னும் வழுவாநிலைக் கோட்பாடு, 'இன்எஃபாபிலிஸ் தேயுஸ்' என்னும் கொள்கைத் திரட்டின் வழியாக, திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் அவர்களால் வழங்கப்பட்டது.

இறைவன் தன் அன்னையை கருவிலேயே குற்றமற்றவராக உதிக்கச் செய்தார். அமலஉற்பவியாக உருவெடுத்த அன்னை கன்னிமரியை போற்றுதற் சிறந்தது. தன்னை சுமக்கும் தகுதியை தந்த இறைவன் அவர்களை முன்குறித்து குற்றமற்ற நிலையில் பிறக்கச் செய்தார் என்கின்ற மறை உண்மையை திருஅவை கோட்பாடாக அறிவித்தது 1854ம் ஆண்டு.

அவ்வளவு ஏன்? பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் தோன்றிய அன்னை கன்னி மரியா, 'நாமே அமல உற்பவம்' என்று தன்னை தூய பெர்னதெத்து அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். திருவிவிலியம் இன்னும் அழகாக இந்த உண்மையை நற்செய்தியில் கடவுள் தம் தூதரை மரியாவிடம் அனுப்பி, அருள்மிகப் பெற்றவரே என்று அறிவித்ததை சொல்லி அன்னையின் அமல உற்பவத்தை உறுதிசெய்கிறது.

பாவமும் தூய்மையும் எதிரெதிர் துருவங்கள். ஜென்ம பாவம் என்பது ஆதாம் ஏவாள் தங்கள் சந்ததிக்கென தேடிக் கொண்ட பாவம். பாவம் இருக்குமிடத்தில் இறைவன் மனித உரு எடுக்க முடியுமா? முடியாது.

இன்னுமொரு விவிலிய எடுத்துக்காட்டின் வழியாகவே இதை புரிந்து கொள்ளலாம். இயேசு தனது நற்செய்திப் பணியை தொடங்கும்முன் திருமுழுக்கு பெறுகிறார். அவர் யாரிடம் திருமுழுக்கு பெற வேண்டுமோ, அந்த திருமுழுக்கு யோவானை கருவில் தூய ஆவியால் நிரப்பி அக்களிப்பால் துள்ளி குதிக்க வைத்து, அதனை அவரது தாயார் எலிசபெத்து

நாவாலேயே அறிக்கையிட செய்தார் இறைவன். இயேசுவுக்கு திருமுழுக்கு தர வேண்டியவரே தூய ஆவியால் கருவில் இருக்கும்போதே அருள்பொழிவு செய்யப் பட்டு ஜென்ம பாவமின்றி மண்ணில் பிறந்தார் எனில் அன்னை மரியாவுக்கு இறைவன் அதை விட மேலான இடத்தை தந்திருப்பதை யார் மறுக்க மறைக்க இயலும் ?

கடவுள் அன்னையை அமல உற்பவியாக தகுதிப்படுத்தியதை தொடக்கக் நூல் அதிகாரம் 3:15 வார்த்தைகள் “உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்” எனும் வார்த்தைகள் தெளிவாக உணர்த்துகின்றன.

பொதுவாக ஒரு தேர்வில் வெற்றி பெற்றவர்களை அழைத்து புதிதாக தேர்வுக்கு தயாரானவர்களுக்கு வகுப்புகள் எடுக்க சொல்வார்கள். அப்படிப் பார்த்தால் இறைவனது தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்ற அன்னை நமக்கு சொல்லும் செய்தி என்ன?

நவம்பர் 24, 1946 முதல் டிசம்பர் 8, 1947 வரையிலான காலகட்டத்தில், அன்னை மரியா அருட்சகோதரி **பியரினாவுக்கு** இத்தாலியின் மோன்டிசியாரியில் உள்ள ஒரு சிறிய தேவாலயத்தில் பதினொரு முறை தோன்றினார். காட்சி தந்த கன்னிமரி தன்னை ‘இரகசிய ரோஜா’ என்று வெளிப்படுத்தினார்கள்.

1947ல் நவம்பர் 16ஆம் நாள் அன்னை கொடுத்த முக்கிய செய்தி: எந்த மானிடரின் துயர் துடைக்க இறைமைந்தன் புவி இறங்கினாரோ, அதே மக்கள் தூய்மைக்கு எதிரான பாவங்கள் செய்து வருவதால் என் மகன் மிகுந்த வேதனை அடைந்துள்ளார். புனிதத் தன்மைக்கு விரோதமான பாவங்கள் அதிகரித்து வருவதால் நாம் பாவங்களுக்குப் பரிகாரமாக தவ முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

1947 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் தேதி 12 மணியளவில் கன்னி மரியா அருட்சகோதரி **பியரினாவுக்குக்** காட்சி தந்தார். இந்த நேரம் “இறை இரக்கத்தின் நேரம்” என்று அன்னை மரியா குறிப்பிட்டார்.

எனவே ஜென்ம பாவமில்லாமல் உற்பவித்த அமல அன்னை ‘நாமே அமல உற்பவி’ என்று பறைசாற்றிய அன்னையின் பெருவிழா அன்று நண்பகல் 12 மணி முதல் 1 மணி வரை உள்ள நேரம் “இறை இரக்கத்தின் நேரம்” என திரு அவையால் அனுசரிக்கப்படுகிறது. இறை இரக்கத்தின் நேரத்தில் இல்லத்திலோ ஆலயத்திலோ அல்லது இருக்கும் இடத்திலேயே எந்த வித இறைவனின் உடனிருத்தலை உணர்ந்து செபிக்க தூய மரியன்னையிடமிருந்து நாம் அழைப்பு பெற்றுள்ளோம்.

ஞானத்தின் தன்மை குறித்து சீராக்கின் ஞான நூல் குறிப்பிடும் பொழுது ஒவ்வொரு தலைமுறையிலும் அது பரிசுத்த ஆன்மாக்களில் நுழைந்து, அவர்களைக் கடவுளின் நண்பர்களாகவும் இறைவாக்கினர்களாகவும் மாற்றுகிறது என்கின்றது.

ஞானத்தின் நிறைவை பெற்ற அன்னை மரியா இறை இரக்கத்தின் நேரத்தில் நம்மை செபிக்க அழைத்தது நமது ஆன்மாவை தூய்மைப்படுத்தவும் அதன் மூலமாக உலகை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கவும் என்பதை உணர்ந்து முழுமன அர்பணிப்போடு செபிப்போம். கடவுளின் நண்பர்களாகவும் இறைவாக்கினர்களாகவும் உருமாறுவோம். மரியே வாழ்க



**முனைவர் சி. ஜாக்சன்**

# இறைநம்பிக்கை



அன்பர்களே! இன்று உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும் போது, நம் உள்ளம் கவலை, அச்சம், பயத்தால் ஆட்கொள்ளப்படுகிறது. உக்ரைனில் நீடிக்கும் போர், இஸ்ரயேலைச் சுற்றி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் நடைபெறும் வன்முறை, குடும்பங்களில் குழப்பம், பெண் குழந்தைகளின் பாதுகாப்பற்ற நிலை என்று அடுக்கிக் கொண்டே போகலாம். தின்று, உறங்கி, பிள்ளைகளைப் பெற்று, கவலைப் பட்டுக் கொண்டே மாண்டு போகவா இறைவன் நம்மைப் படைத்தார்? இல்லவே இல்லை. இவையெல்லாம் நாமே உருவாக்கிக் கொண்ட மாயத் தோற்றம்.

ஆனால் உண்மை நிலை என்ன? “நாம் அனைவரும் கடவுளின் கைவேலைப்பாடு. நற்செயல் புரிவதற்கென்றே, கிறிஸ்து இயேசு வழியாகப் படைக்கப்பட்டிருக்கிறோம்” என்றல்லவா எபேசியர் 2:10 கூறுகிறது. நாம் நமக்கென ஒரு பாதையை அமைத்துக் கொண்டு அதில் இறைவன் வரவேண்டும் என ஆசைப்படுகிறோம். நாம் எண்ணியது நடைபெறவில்லையெனில், கவலைப் படுகிறோம். இருள் கவியும் இடத்தில் ஒளியை ஏற்றினால், இருள் காணாமல் போகிறது. நானே உலகின் ஒளி என்கிறார் இயேசு. அவர் உள்ள இடத்தில் அச்சமும், கவலையும் மறைந்து போகிறது.

கவலை என்பது ஒரு மனப்பாங்குதான். வேறொன்றுமில்லை. கடவுளின் ஆசீர்வாதங்களை நாம் உணர முடியாமல் செய்துவிடுகிறது. நாம் எப்போதும் நம்மிடம் என்ன இல்லை என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். நம்மிடம் இருப்பதை எண்ணி நன்றி சொல்வதில்லை. “மகனே! நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய். என்னுடையது எல்லாம் உன்னுடையது” என்றல்லவா இறைவன் கூறுகின்றார் (லூக் 15:31). இவ்வார்த்தை நம்மைக் கவலையில் ஆழ்ந்திருக்கவா

சொல்கிறது. எப்பொழுதும் நன்றியுடன், மகிழ்ந்திருக்கக் கூடிய மனநிலையை அல்லவா தருகின்றது (பிலி 5:16). நம்பிக்கை கொள்ளாத உள்ளம் இறைவனை விட்டு விலகும். நம்பிக்கை கொண்ட உள்ளத்தில் பயமும் கவலையும் தோன்றாது.

மழை வருவதற்கான அறிகுறியே இல்லாத போதும், நோவா பேழையை அமைத்தது இறைவன்பால் கொண்ட நம்பிக்கையால்தான். ஆபிரகாம் திக்குத் தெரியாத நாட்டிற்குச் சென்றதும் கடவுள்மீது வைத்த நம்பிக்கையால்தான். நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்களைக் கூட்டிக் கொண்டு போனதும், மோயீசன் கடவுள்மீது கொண்ட நம்பிக்கையால்தான்.

கடுகளவு நம்பிக்கை இருந்தால் மலைகள் இடம் பெயரும். செங்கடலில் பாதை உண்டாகும், பன்னிரண்டு ஆண்டுகளாய் வாட்டிய இரத்தப்போக்கு நின்றுபோகும். ஐந்து அப்பமும், இரண்டு மீனும் ஐயாயிரம் பேருக்கு உணவாக மாறும், தண்ணீர் திராட்சை இரசமாகும். இறைவன்மீது நம்பிக்கை கொண்டால் இத்தனையும் நடைபெறும். ஏன் இதற்கு மேலும் நடைபெறும். நான் செய்யும் செயல்களைவிட பெரியவற்றை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வர் என்றல்லவா இயேசு கூறுகிறார் (யோவா 14:12). இறந்த லாசரை உயிருடன் எழுப்பியவர், பேதுருவை கடல் மீது நடக்க வைத்தவர், கொந்தளிக்கும் கடலை அமைதிப்படுத்தியவர் கூறுகிறார் “அஞ்சாதீர்கள்” என்று! இன்னும் ஏன் நமக்கு அச்சமும் கவலையும்?

இயேசுவே, உமக்கு எல்லாம் தெரியும். எனக்கு உம்மை மட்டும்தான் தெரியும் என்று அவரிடம் பூரண சரணாகதி அடையும்போது, அச்சமும் கவலையும் நம்மிடம் தோற்றுப் போகும்.

விவிலியத்தில் வரும் இரண்டு நிகழ்வுகளை நாம் சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும். ஒன்று, மார்த்தாள் இயேசுவிடம், “நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் லாசர் இறந்திருக்க மாட்டான்” என்று கூறினாள். ஆம், அவள் அறிந்திருந்தாள், நம்பினாள், இயேசு இருந்திருந்தால் லாசர் பிழைத்திருப்பான் என்று! நூற்றுக்கு நூறு உண்மை. ஆனால் அவ்வாறு இருந்திருந்தால் இயேசுவின் வல்லமை உலகம் அறிந்திருக்காது. இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும் நாம் லாசரைப் பற்றிப் பேசுகிறோம். இறைவனின் எண்ணங்கள், நம்முடைய எண்ணங்கள் அல்ல. காலம் தாழ்த்துவதிலும் ஒரு பொருள் பொதிந்திருக்கும்.

இரண்டாவது படகு கடலின் கொந்தளிப்பில் தத்தளிக்கும்போது, இயேசு படகில்தான் இருந்தார். ஆனால் சீடர்கள் அஞ்சினார்கள். எனவேதான், இயேசு “ஏன் அஞ்சுகிறீர்கள், நான் இருக்கும்போது?” என்று சீடர்களைப் பார்த்து கூறினார். இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையின் பலன் காலந்தாழ்த்தியும் கிடைக்கும். அச்சத்தில் தவிக்கும்போதும் கிடைக்கும். காலமும், நேரமும் அவருடையன. கலக்கம் வேண்டாம்.

தம் சொந்த மகனென்றும் பாராது, நம் அனைவருக்காகவும் அவரை ஒப்புவித்த கடவுள், தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ? (உரோ 8:32). என்னவொரு நம்பிக்கை தரும் வார்த்தை! இயேசுவின்மீது நம் கண்களைப் பதிய வைப்போம். அவர் மீது நம்பிக்கை கொள்வோம். வாழ்வை இனிதாக்குவோம்.



பவுல் ராஜ்

# இதுதான் கிறிஸ்துமஸ்



அது ஒரு சிறிய வீடு. ஒரே ஒரு அறை. அதிலேயே சிறிய தடுப்புச் சுவருடன் சமையலறை, குளியலறை இரண்டு ஓரங்களிலும் அமைந்திருந்தது. குறைந்த வாடகையில் இதுதான் அவர்களுடைய வருமானத்துக்கு உகந்ததாக இருந்தது.

அது தன் அம்மா அப்பாவின் கடைசி கால வாழ்க்கைக்காக தன் மனைவியின் தொந்திரவு பொறுக்க முடியாமல் ஐந்தரை சென்ட் நிலத்தில் தங்களது வீட்டின் ஓரமாகக் கட்டப்பட்ட சிறிய அறை. அவர்களது மறைவுக்குப் பின்னர் சிறிது காலம் காலியாகக் கிடந்தது. பின்னர் இந்தக் குடும்பத்தினர் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்தனர்.

டிசம்பர் மாதம் என்பதால் அருகே இருந்த எல்லா வீடுகளும் வெள்ளையடிக்கப்பட்டு புத்தம் புதுப் பொழிவுடன் காணப்பட்டது. ஆனால், இந்த சிறிய வீடு மட்டும் தன் நிலையை இழக்காமல் அழுது வடிந்து கொண்டிருந்தது.

அன்பிய பொறுப்பாளர் அந்த வீட்டினருகே வந்து நின்றார். "யாரும்மா உள்ளே?" என்று குரல் கொடுத்தார்.

"வாங்கய்யா" என்று அழைத்தவாறு பெண்மணி வாயிலுக்கு வந்தாள்.

"இந்தாங்கம்மா ஆலய காலண்டர்."

"ரொம்ப நன்றிங்கய்யா."

"அப்புறம் எப்படி உங்கள் கணவர் தொழில் போகுது?"

"ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக வந்து கொண்டிருக்கிறது ஐயா."

"சரிம்மா, நான் வருகிறேன்."

கடைசியாக இரண்டு தெரு தள்ளி அமைந்துள்ள தெரசாவின் இல்லத்திற்குச் சென்றார் அன்பியப் பொறுப்பாளர். பங்குப் பேரவை உதவித் தலைவியும் அங்கு இருந்தார்.

"வாங்க சகோதரரே என அன்புடன் வரவேற்றனர்."

தெரசா ஒரு அமைதியான பெண். அவள் டென்ஷன் ஆகாமல் பொறுமையுடன் எதையும் கையாள்வாள். அன்புடன் பேசுவாள். அவளது இல்லத்திற்குச் சென்றவர் யாரும் வெறும் வயிற்றுடன் திரும்புவதில்லை. கண்டிப்பாகக் குறைந்த பட்சம் அரை டம்ளர் டீயாவது சாப்பிட்டுச் செல்லாமல் விடமாட்டாள். அதனால்தான் தெரசாவின் வீட்டிற்குச் செல்வதைக் கடைசியாக வைத்துள்ளார் அன்பியப் பொறுப்பாளர்.

"என்ன சகோதரரே அன்பியம் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த மாதம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் யாரு வீட்டில்?"

"ஏறக்குறைய எல்லோருக்கும் அவரவர் வீட்டில் எல்லாக் கொண்டாட்டங்களும் நடைபெற்றுவிட்டன. ஒரே ஒரு வீடுதான்

பாக்கியிருக்கிறது. ஆனால், அவரது வீடு பாலன் பிறந்த வீட்டைவிட படுமோசமாக இருக்கிறது. அந்த வீட்டுஓனர் அவர்களுக்கு வீடு கொடுத்ததே பெரிய சமாசாரம். குறைந்த வாடகை என்பதால் மேற்கொண்டு பராமரிப்பு ஏதும் செய்வதாக இல்லை. இந்தக் குடும்பத்தினருக்கும் வருமானம் குறைவுதான். அதுதான் யோசனையாக இருக்கிறது."

"அந்தக் குடும்பம் எப்படி?"

"எப்படின்னா?"

"அதுதான் ஆலய வழிபாடுகளில் அன்பியக் கூட்டங்களில் ஒழுங்காகக் கலந்து கொள்கிறார்களா?"

"ஆமாம், சகோதரி. நீங்கள்தான் பார்த்திருப்பீர்களே? ஒவ்வொரு நிகழ்வு தொடங்குமுன்னும் வந்துவிடுவாள். இருக்கைகளை ஒழுங்குபடுத்துவாள். மற்றவர்கள் வந்துவிட்டால் ஓரமாக ஒதுங்கி அதுவும் தரையில் அமர்ந்துகொள்வாள்."

"சகோதரரே, எங்கள் வீட்டின் பின்புறம் உள்ள சிறிய வீடு சும்மாதான் கிடக்குது. அதை வெள்ளையடித்துத் தருகிறேன். அந்தக் குடும்பத்தை அதில் தங்கிக் கொள்ள ஏற்பாடு செய்யுங்கள், அவர்கள் விரும்பும் வரை இலவசமாகத் தங்கிக் கொள்ளட்டும்."

"நன்றி சகோதரி. அந்தக் குடும்பம் ரொம்ப சந்தோஷப்படும்."

"என் மகன் குடும்பத்துடன் வெளிநாட்டில் செட்டில் ஆகிவிட்டான். அவர்களது குடில் செட் இருக்கிறது. அந்த வீட்டிற்குக் கொடுத்து, கிறிஸ்துமஸ் விழாவை ஜாம் ஜாம் என்று கொண்டாடுவோம்" என்றார் உதவித்தலைவி.

"அருமையான யோசனை சகோதரி. அப்படியே செய்துவிடுவோம்."

மறுநாள், மூவரும் செயலில் இறங்கினர். வீடு வண்ண வண்ண கலரில் வெள்ளையடிக்கப்பட்டது. மறுவாரம் சனிக்கிழமை கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம் என அன்பியப் பொறுப்பாளர் அனைவருக்கும் அறிவிப்புக்கொடுத்தார். சிறியவீடாக இருந்தாலும் மூவரின் உதவியினால் மின்விளக்குகள், பலூன்கள், குடில் செட் மற்றும் அலங்காரப் பொருள்களுடன் அழகாகத் தோற்றமளித்தது.

அனைவரும் ஒன்றாகக் கூடியிருந்து மகிழ்ச்சியுடன் கிறிஸ்துமஸ் விழாவை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். விழா முடிந்ததும் பங்குத்தந்தை அந்த ஏழை சகோதரியை அழைத்து அந்த வீட்டின் சாவியைக் கொடுத்தார். ஏற்கனவே அன்பியப் பொறுப்பாளர் சாடைமாடையாகத் தெரிவித்திருந்தார். கண்ணீர் மல்க சாவியைப் பெற்றுக் கொண்டார். அனைவரும் கரவொலிஎழுப்பினர்.



ம. வெனான்சியுஸ்



## பனிமய சாட்சியம்

110

**சேவியர் பாத்திமா, தூத்துக்குடி**

என் மகளுக்கு தலையின் பின்புறம் கட்டி இருந்ததால் பேச்சு, பார்வை, வலது கை மற்றும் கால் செயல்பட முடியாமல் போய்விட்டது. எனவே உடனடியாக நாங்கள் அவளை ராணிப்பேட்டை C.M.C. மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். ஐந்து நாட்களுக்குப் பிறகு அறுவை சிகிச்சையின் மூலம் தலையிலுள்ள கட்டி நல்ல முறையில் அகற்றப்பட்டது. இயேசுவின் கருணையாலும், இரக்கத்தினாலும், பனிமய அன்னையின் பரிந்துரையினாலும் மகள் இப்பொழுது பூரணசுகம் பெற்று ஒரு சாட்சியாக இருக்கிறாள். கோடான கோடி நன்றி! இயேசுவுக்கே புகழ்! தூய ஆவியானவருக்கு நன்றி! பனிமயத் தாயே வாழ்க!



# நான் நானாகத்தான்

"ஜோதி! மாப்பிள வீட்ல ஏதும் தகவல் சொல்லி அனுப்புனாங்களா?" ஆவலுடன் கேட்டார் அப்பா ராபர்ட்.

"ஆமாங்க. 50 பவுன் நகையும், 5 இலட்சம் ரொக்கமும் தரச் சம்மதிச்சா, கிறிஸ்துமஸ் அன்று நிச்சயம் பண்ணிரலாம்னு போன் பண்ணி சொல்லிட்டாங்க" என்றாள் அம்மா ஜோதி.

"ச்சே, நம்ம நிலம தெரிஞ்சுமா இப்படி கேட்கிறாங்க" அங்கலாய்த்தார் ராபர்ட்.

"இல்லீங்க, உங்க உயர்ந்த பதவியை மனசில வச்சித்தான் கேட்கிறாங்க. பெரிய இடம், வசதியான குடும்பம், பணம் நிறைய வச்சிருப்போம்னு அவங்க நினைச்சுக்கிட்டிருக்காங்க. கிம்பளம் இல்லாம சம்பளம் மட்டும்தான் வாங்கி மாசக் கடைசியில பணத்துக்கு திண்டாடுற கதையெல்லாம் அவங்களுக்கு எப்படித் தெரியும்" கிண்டல் செய்தாள் ஜோதி.

"நமக்கு அவ்வளவு கொடுக்க முடியாது. இந்த சம்பந்தம் வேண்டாம்னு சொல்லிடுவோம்" விரக்தியாக சொன்னார் ராபர்ட்.

"அப்பா! அப்பா! அவரைப் பார்த்தவுடனே எனக்கு ரொம்பப் பிடிச்சிட்டுப்பா. முயற்சி பண்ணிப் பாருங்க. முடியாட்டா வேண்டாம்" கொஞ்சலுடன் கெஞ்சினாள் மகள் டயனா.

ஏமாற்றத்துடன் கண்கலங்கும் மகளைப் பார்த்து மனம் உருகினார் தந்தை.

"கவலைப்படாதேம்மா. ஆபிஸ்ல லோன் கேட்டுப் பார்ப்போம். உன் அண்ணன் ராபின் கிட்டேயும் பணம் கேட்போம்" ஆறுதல் சொன்னார் அப்பா.

"அட போங்கப்பா. என்கிட்ட எதுவும் கிடையாது. உயர்ந்த அதிகாரியா இருந்து உங்களுக்குப் பிழைக்கத் தெரியல. உங்க நண்பர் ஜார்ஜ், உங்கள மாதிரிதானே வேல பார்க்கிறார்? எவ்வளவு பணம் சேர்த்து கார், பங்களான்னு வசதியா இருக்கார். நீங்க நினைச்சா ஒரு கையெழுத்துக்கு எவ்வளவோ வாங்கலாம். ஒரு வேலையை முடிச்சுக் கொடுத்தா கட்டுக்கட்டா சம்பாதிக்கலாம்" என்ற ராபினைக் குறுக்கிட்டு, "டேய் ராபின்! வாயைக் கழுவுடா. அவரு லஞ்சம் வாங்கினா, நானும் லஞ்சம் வாங்கனும்னு சொல்றது எந்த விதத்தில் நியாயம்டா? **அவர் தவறு செய்தால் நானும் தவறு செய்யனும்னு சட்டம் இருக்குதா? நான் நானாகத்தான் இருப்பேன்.** உறுதியாகச் சொன்னார் ராபர்ட்.

"அப்ப தங்கச்சி கல்யாணத்த மறந்துடுங்க. அல்லது இன்னொரு வழியும் இருக்கு. உங்க

நண்பர் ஜார்ஜ், அவர் மகளுக்கு 100 பவுன் நகையும், 10 இலட்ச ரூபாய் ரொக்கமும் தந்து எனக்கு மணமுடிக்க தயாரா இருக்காங்க. வேணும்னா அவங்க தர்ர வரதட்சணையில் இருந்து தங்கச்சிக்கு கல்யாணம் பண்ணி வைக்கலாம்" சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக் கொண்டு தனது திருமணத்தை மெதுவாக இடையில் சேர்த்துவிட்டான்.

"போடா போ, பாவத்துல சம்பாதிக்கிற பணம் நமக்கு வேண்டாம்டா. தங்கச்சி கல்யாணத்தை கடவுள் பார்த்துக்கிடுவாரு. டயானா! பனிமய மாதாவிடம் நல்லா வேண்டிக்கம்மா என்ற ராபர்ட், பணத்திற்கு வழி தேட சிந்திக்கத் தொடங்கினார்.

டயானாவும், பனிமய மாதா ஆலயத்திற்குச் சென்று, "அம்மா, பிறக்கப் போகும் பாலன்கிட்ட எனக்காகக் கேளுங்கம்மா. கானாவூர் கல்யாணத்துல, நீங்க சொல்லித் தானேம்மா, இயேசப்பா தண்ணீரை இரசமாக்கினாரு, நீங்க சொன்னா எனக்கும் கல்யாணம் பண்ணி வைப்பாரு" என்று வேண்டிக் கொண்டாள்.

கிறிஸ்துமஸ் நெருங்கியது. திடீரென்று சிங்கப்பூரில் வேலை பார்த்துக் கொண்டிருந்த டயானாவின் அத்தை மகன் சார்லஸ் காரில் வந்து இறங்கினான்.

"மாமா, டயானாவுக்கு நிறைய நகை செய்து கொண்டு வந்திருக்கேன். பணமும் சேர்த்து வைச்சிருக்கேன். நான் ஊருக்குப் போறதுக்குள்ள எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிருங்க" ஆவலோடு கேட்டான்.

ஒரு கணம் சந்தோஷத்தில் திக்குமுக்காடினார் ராபர்ட். அதற்குள் ஜோதி குறுக்கிட்டு, "என்னங்க. டயானாவுக்கு வேறு மாப்பிள்ளையைப் பேசி முடிச்சுட்டு இப்ப அக்கா மகன் வந்ததும் மனசை ஆட விடறீங்களே. அதுவும் இரத்த உறவுல எப்படி...." தடை போட்டாள்.

சார்லஸ், டயானாவை ஏக்கத்துடன் பார்த்தான். அவள் தனக்கு விருப்பமில்லை என்று பார்வையிலேயே பதில் சொன்னாள்.

பெருமூச்சுவிட்ட சார்லஸ், "பரவாயில்லை மாமா, டயானாவுக்குன்னு கொண்டு வந்த நகை, பணத்தையெல்லாம் அவளுக்கே சீதனமாகக் கொடுத்துவிடுகிறேன்" பெருந் தன்மையாகச் சொன்னான்.

டயானா, மனதிற்குள் பனிமயத் தாய்க்கு நன்றி சொன்னாள்.

பேசிக் கொண்டிருந்தபோது பதட்டத்துடன் உள்ளே நுழைந்தான் ராபின்.

"அப்பா, அப்பா! ஜார்ஜ் அங்கிள வருமானவரி அதிகாரிகள் சோதனையிட்டு, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததுக்காக, காவல் அதிகாரிகளுடன் வந்து கைது செய்துட்டாங்க. அவங்க சொத்தையெல்லாம் பறிமுதல் செய்துட்டாங்க. அவங்க மகளை நான் கல்யாணம் செய்ய முடியாது. தங்கச்சிக்கு..... பணம்.... என்றவனைக் குறுக்கிட்ட அப்பா, "ராபின்! உன் தங்கச்சிக்கு இன்னொரு அண்ணன் சீர் செய்துவிட்டான்" என்றதும், அப்போதுதான் சார்லஸைப் பார்த்த ராபின், அவனைத் தோழமையுடன் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

"ராபின்! இப்பத்தான் நீ ஜார்ஜ் மகளை ஒரு பைசா கூட வரதட்சணைக் கேட்காமல் திருமணம் செய்து, கஷ்டத்துல இருக்கிற அவங்க துன்பத்தைத் துடைக்கனும். நாம் எப்போதும் நாமாகத்தான் இருக்கனும்" என மகனைத் தட்டிக் கொடுத்தார்.

கிறிஸ்துமஸ் அன்று இரு திருமணங்களும் நிச்சயிக்கப்பட்டு, அவர்கள் குடும்பங்களில் கிறிஸ்து பிறப்பின் நிறைவான மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.



ஜோ. ரெஜினா கிரகோரி



# ஊனம்

விழியில் குறைபாடு ஊனமல்ல
விழிப்புணர்வில் குறைபாடே ஊனம்

கையில் குறைபாடு ஊனமல்ல
நம்பிக்கையில் குறைபாடே ஊனம்

கால்களில் குறைபாடு ஊனமல்ல
காலமறிந்து செயல்படாததே ஊனம்

உருவத்தில் குறைபாடு ஊனமல்ல
உழைப்பில் குறைபாடே ஊனம்

அழகில் குறைபாடு ஊனமல்ல
பழகும்பண்பில் குறைபாடே ஊனம்

அறிவில் குறைபாடு ஊனமல்ல
அறியாமையில் வாழ்வதே ஊனம்



பனிமய சுகந்தி

# விவிலியப் போட்டி 116

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## பொது திருமுகம் - யாக்கோபு : 1-5

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**I. ஓரிரு வார்த்தைகளில் விடையளி :**

1. எது தீர்ப்பை வெல்லும்?
2. புல்வெளி பூவைப்போல மறைந்தொழிபவர்கள் யார்?
3. யாக்கோபு நூல் யாருக்கு எழுதப்பட்டது?
4. நிறைவு பெற்றவர் யார்?
5. யாரேனும் துன்புற்றால் என்ன செய்ய வேண்டும்?
6. காற்றினால் அலைக்கழிக்கப்படும் கடல் அலையைப் போன்றோர் யார்?
7. தன் செயல்களால் கடவுளுக்கு ஏற்புடையவரான பெண் யார்?
8. மகிழ்ச்சியாக இருந்தால் எதை இசைக்க வேண்டும்?
9. அமைதி என்னும் விதையிலிருந்து விளையும் கனி எது?
10. தளரா மனம் கொண்ட மனிதர் யார்?

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.12.2024**

# விவிலியப் போட்டி 115 நவம்பர் 2024 விடைக்குறிப்புகள்

## மாற்கு அதிகாரம் 1-5 வரை

**I. ஓரிரு வார்த்தைகளில் விடையளி :**

| | | |
|---|---|---|
| 1. | ஓய்வு நாள் | மாற் 2:28 |
| 2. | யோவான் | மாற் 1:6 |
| 3. | யோவான் | முன்னுரை |
| 4. | 16 | முன்னுரை |
| 5. | பர்னபா | முன்னுரை |

**II. பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1. | எழுந்திடு | மாற் 5:41 |
| 2. | இறையாட்சி | மாற் 4:31 |
| 3. | இடியைப் போன்றோர் | மாற் 3:17 |
| 4. | லேவி | மாற் 2:14 |
| 5. | திருமுழுக்கு | மாற் 1:5 |

**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 202**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 121**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. குழந்தை இயேசு அன்பியம் **மோனிகா செபாஸ்டின்**
2. மணல் மாதா அன்பியம் **ரொசாரி கோமஸ்**
3. லூர்து மாதாஅன்பியம் **ரோஸ்லின் தாமஸ்**
4. மிக்கேல் அதிதூதர் அன்பியம் **ஜோசபின் பர்னாந்து**

## பாராட்டுக்குரியவர்கள் : 117

**அந்தோனியார் அன்பியம்**
5. ரீனா மொறாயிஸ்
6. பிருந்தா
7. சரோஜா
8. ஜெயா

**அன்னை தெரசா**
9. ரொவீனா
10. செல்வராணி
11. ரெயிசா சுஜய்
12. ஜான்சி ராணி
13. சாந்தி அந்தோனிசாமி
14. சுகன் மோனிஷா
15. சுரேஷ் பிரேமா
16. அண்டனி
17. பெற்றி சூசையா

**அன்னை வேளாங்கன்னி**
18. டென்சி
19. நான்சி
20. கவாஷினி ஆல்வின்

**கிறிஸ்தரசர்**
21. லூரட் வசந்த்
22. செலஸ்கி கிளமென்ட்
23. ஜூலியட் சாவியோ
24. ரெக்ஸ் கிரீன்வெல்
25. நேவிஸ்

**தஸ்நேவிஸ் மாதாஅன்பியம்**
26. பிராங்கிளின் லூடி
27. ராஜா ஜரின்

**திவ்யபாலன் அன்பியம்**
28. பிரின்சி
29. சகாயராணி தன்ராஜ்

**பாத்திமா மாதா**
30. ஜெசிந்தா கான்ஸ்டன்
31. ரீனா ராஜா
32. அனு ஆல்வின்
33. ஜெனிற்றா மைக்கேல்
34. ஸ்டெபி ரீகன்
35. பிச்சம்மாள்
36. சுகந்தா ஸ்டேனி
37. இன்பென்ட் பௌஸ்டினா

**இரக்கத்தின் மாதா**
38. பாப்டிஸ்டா
39. பிரைட்டன் ஜெரோபின்
40. இருதயம்மாள் கொன்சால்
41. சித்ரா மோத்தா
42. சேவியரம்மாள் கோமஸ்
43. செல்வி புரோ
44. சகாய ராணி

**ஜெபமாலை மாதா**
45. சகாயம்மாள் பெனடிக்ட்
46. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
47. டிரைபேனா
48. டெரன்சியா அரிஸ்டோ
49. அலெக்சான்ட்ரியா இன்பா
50. அந்தோனிசாமி

**காவல் தூதர்**
51. எலிஜா இம்மானுவேல்
52. ஜெயா அகஸ்டின்
53. சாந்தி ஆல்ட்ரின்
54. ஜோ ட்ரினிஷா
55. சார்லட் பிராங்க்
56. அல்பின்
57. பிரிசில்லா
58. ஜெஸிமா கிளாரன்ஸ்
59. ரஜூலா அலாய்
60. வெனிட்டாள்
61. ரஸ்கின் வசந்தா
62. ஜூலியஸ்
63. திவ்யா மலர்

**குழந்தை தெரசா**
64. பெனி மொறாயிஸ்
65. பெர்லி டென்சன்
66. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
67. எமல்டா
68. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
-----------

**லூர்து மாதா**
69. சாண்டினா
70. ஆலிவர் வி. ராயன்
71. ஃபிலோகோமஸ்
72. ஜெனோ சேவியர்
73. ரஜூலா ஜான்போஸ்கோ

**மிக்கேல் அதிதூதர்**
74. லினோ அந்தோனி
75. ஜோஸ்பின் பர்னாந்து

**பனிமய அன்பியம்**
76. மெர்சி;
77. ஜாக்குலின் வினோதினி
78. சுரேஷ் ஆனி
79. ராணி
80. ஜூடு ரதி

**பவுலடியார்**
81. ராஜா ரோஸ்லின்
82. லீமாரோஸ் ஜாய்

**பரிபூரண மாதா**
83. சப்னா கினிஸ்டன்
84. மெடோனா
85. ஜெனிஷா
86. ஷெர்லின் ஜெனீஸ்

**பொம்பெயி மாதா**
87. மேத்யூ கர்டோசா
88. டிஃபானி அண்டோ
89. ஜான்சிராணி அமல்ராஜ்
90. லூடா கான்ஸ்டன்
91. இம்மாக்குலேட் சதீஷ்
92. மரிய அல்சி

**இராயப்பர்**
93. டெய்ஸி
94. ஒபிலியா தாமஸ்

**சவேரியார்**
95. டெலிலா அமலன்
96. சகாயம் அண்டன்
97. அனுஷ்யா பீட்டர்
98. ஜான்சி ஜெயகுமார்
99. ரூபா மனுவேல்
100. ஜோர்னஸ் ஜென்ஸி
101. வினிஸ்டா ஷெரின்

**செபஸ்தியார்**
102. அந்தோனியம்மாள் டென்சிங்
103. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
104. பிரவீனா
105. ஜெஸிமா சேவியர்
106. பிரின்சி லியோ

**சிந்தாத்திரை மாதா**
107. நேசம்
108. ஜூடி ஆரோக்கியராஜ்
109. ஜெஃப்ரினா ராயன்
110. ராஜி ஜஸ்டின்
111. லாசர் செல்வி

**சிறுமலர் அன்பியம்**
112. விஜி சகாயராஜ்
113. எல்சிட்டா ஆனந்த்
114. செலஸ்டின்

**சூசையப்பர்**
115. கிறிஸ் ரீஜோ
116. ஹேமலதா
117. மோனிஷா காஸ்பின்
118. மென்ஸி

**திருச்சிலுவை**
119. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
120. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
121. லூர்துலினட்

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 81

**பரிசு பெறுபவர்கள் : 4**

122. புதியம்புத்தூர் — **ஹெலன் அன்னமணி**
123. திருச்சி — **மேத்யூ விவேக்**
124. தூத்துக்குடி யூதா ததேயு கோவில் — **ரோஸ் சேவியர்**
125. தூத்துக்குடி பாத்திமா நகர் — **மேரி ஹேம்லின்**

## பாராட்டுக்குரியவர்கள் : 77

**திண்டுக்கல்**
126. ரொசாலி
127. ஜெர்மேன்
128. ஜான்சி பிரபு

**ஆறுமுகநேரி**
129. ஜெயராணி
130. தொம்மை அந்தோணி

**சென்னை**
131. கமலஜோதி ஜெயசீலன்
132. கனிஷியஸ் விஷால்
133. ரெஜினா கிரகோரி
134. பிரேமா குணசீலன்

**திருச்சி**
135. ஜெக ரெட்சகன்
136. மோனிட்டா கிறிஸ்டி
137. டோனி
138. ஜான்சி ராணி

**வடக்குத்து**
139. ஹென்றி தாஸ்

**கொடைக்கானல்**
140. ஜெஸிந்தா மார்டின்

**கயத்தாறு**
141. அமல்ராஜ்

**தென்காசி**
142. செல்வமேரி

**பேட்டை**
143. ஹெலனிட்டா

**கோவளம்**
144. சரோபின் ஜோசப்

**கோயம்புத்தூர்**
145. சத்யா சேவியர்
146. ஆஷா தனசீலன்

**திருநெல்வேலி**
147. மைக்கேல் அம்மாள்

**உவரி**
148. அர்லின் ஈவ்லின்

**திருப்பூர் (பல்லடம்)**
149. பிரான்சிஸ் ஆர்லன்

**புன்னைக்காயல்**
150. சகோ. லோரா மேரி

**மதுரை**
151. சகோ. ஜான்சிமேரி
152. ஜெஸிந்தா மேரி

**பெரியகுளம்**
153. குழந்தை தெரஸ்

**உடன்குடி**
154. ஸ்நோவின்

**வீரபாண்டியன் பட்டணம்**
155. ரேச்சல் ராயன்

**ஆலந்தலை**
156. பொன்சேகா

**சிப்பிக்குளம்**
157. ஜெனஸிஸ்

**ஏரல்**
158. ஜாய்ஸ் ரெத்னம்

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இதயங்களின் பேராலயம்**
159. ரிமோல்டா
160. பீட்டர் ஜெயந்தி
161. ரமோலா கமிலஸ்
162. கிரேட்டா ராஜா

**குருஸ்புரம்**
163. பௌவுசி ஜோ மைக்கேல்
164. பிளாசி செல்வராஜ்
165. ஜான்சி மெண்டிஸ்
166. ஆசீர்வாதம்
167. சபிதா ரெஸிங்டன்
168. டெல்பின்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
169. சகாயம்
170. சுகிர்தா
171. ஷெரினா
172. டோமினிக்
173. நேவிஸ்
174. பேபின் ரால்ஃப்

**யூதா ததேயு கோவில்**
175. சுகாயராஜ் ரொட்ரிக்ஸ்
176. சகாயமேரி
177. ஆரோக்கிய ஷர்மிளா

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
178. அலெக்ஸ் ஜோ ஆனந்த்
179. சூசைநெவின்

**காந்தி நகர்**
180. ரியாலினோ
181. பேபி வால்டர்
182. அன்சிட்டா
183. பின்டன் சோஃபியா
184. ரமேஷ் நர்மதா
185. சாந்தினி

**சார்லஸ் கோவில்**
186. அல்போன்சா பர்னான்டோ
187. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
188. லிஜியா
189. ஜெஸிந்தா ஜஸ்டஸ்
190. செக்கரியா சாமுவேல்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
191. தயாபரராணி
192. வெர்ஜின்

**அந்தோனியார் கோவில்**
193. வயோலா ஜான்சன்
194. மென்சிலா லொயோலா
195. ரீடன்
196. இருதயம்மாள் கபிரியேல்
197. மகேஷ் சுஜாதா

**பாத்திமா நகர்**
198. ரமேஷ் ஷர்மிளா
199. ஜூனோபியா

**அண்ணா நகர்**
200. வென்சி ராணி

**அலங்காரத்தட்டு**
201. மேரி ரோஸ்லின்

**திரேஸ்புரம்**
202. கோல்வின் ஜேசுராஜ்

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம்.

**63796 41209** — அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 181**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 202**

**குறிப்பு:** ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்



## தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி

# 2024 கிறிஸ்து பிறப்பு கால சிறப்பு நிகழ்வுகள்

### 1. கிறிஸ்து பிறப்பு விழா வழிபாட்டு விபரங்கள்



24.12.2024 செவ்வாய் இரவு 11.00 மணிக்குப் பேராலயக் கதவுகள் திறக்கப்படும். 11.15 மணிக்குப் பாடகர் குழுவினரால் கிறிஸ்துமஸ் பாடல்கள் இசைக்கப்படும். 11.50 மணிக்கு நள்ளிரவுத் திருப்பலி தொடங்கும்.

மறுநாள் (25.12.2024 புதன்) காலை 06.30 மணிக்கும், 08.00 மணிக்கும் தமிழில் திருப்பலியும், 09.30 மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலியும் நடைபெறும். நண்பகல் 12.00 மணிக்கு சிறப்புத் திருப்பலி நடைபெறும். **மாலையில் திருப்பலி நடைபெறாது.** மாலை 05.30 மணிக்கு நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும் நடைபெறும்.

### 2. கிறிஸ்துமஸ் விழாக் கலைநிகழ்ச்சிகள்

கிறிஸ்துமஸ் (25.12.2024 புதன்) அன்று மாலை 06.30 மணிக்கு "பனிமய இளையோரின்" முன்னெடுப்பில் கிறிஸ்துமஸ் விழாக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

### 3. மாசில்லாக் குழந்தைகள் விழா



மாசில்லாக் குழந்தைகள் திருவிழாவை முன்னிட்டு **28.12.2024 சனி அன்று இரண்டாவது திருப்பலி காலை 07.00 மணிக்கு** நடைபெறும். திருப்பலியின் முடிவில் குழந்தைகள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். பாலன் ஆசீர்வாதம் நடைபெறும்.

### 4. திருக்குடும்ப சபைத் திருவிழா



**திருக்குடும்ப விழாவாகிய 29.12.2024 ஞாயிறு** அன்று நமது பங்கின் திருக்குடும்ப சபையினர் தங்கள் சபைத் திருவிழாவைக் கொண்டாடுவர். அன்றைய இரண்டாவது திருப்பலியில் **புதிய பொறுப்பாளர்கள்** பணி ஏற்பதுடன், புதிய உறுப்பினர்களுக்கு நாடா அணிவிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

### 5. திருமண விழா நாயகர்களின் நன்றித் திருப்பலி

பேராலயப் பங்கைச் சேர்ந்த திருமண பொன்விழா, வெள்ளி விழா நாயகர்கள், மற்றும் திருமணமாகி 40 ஆண்டுகள், 60 ஆண்டுகள், 70 ஆண்டுகள், அதற்குமேல் நிறைவு செய்யும் தம்பதியருக்கான சிறப்பு நன்றித் திருப்பலி 29.12.2024 ஞாயிறு அன்று மாலை 05.30 மணிக்குப் பேராலயத்தில் நடைபெறும்.

## 6. ஆண்டின் இறுதிநாள் நன்றி வழிபாடு

இந்த ஆண்டின் இறுதி நாளான **31.12.2024 செவ்வாய்** அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும் **நன்றி வழிபாடும்**, தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதனமும் வழங்கப்படும்.

## 7. புத்தாண்டு வழிபாட்டு விபரங்கள்

***31.12.2024*** செவ்வாய் இரவு ***11.15*** மணிக்குப் பேராலயக் கதவுகள் திறக்கப்படும். ***11.30*** மணிக்குப் பாடகர் குழுவினரால் கிறிஸ்துமஸ் - புத்தாண்டுப் பாடல்கள் இசைக்கப்படும். ***12.00*** மணிக்கு பேராலய மணிகள் முழங்க, பனிமய அன்னைக்கு குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும் செபம் மன்றாடப்படும். பின்னர், புத்தாண்டுத் திருப்பலி நடைபெறும்.

## 8. மேதகு ஆயரின் திருப்பலி



***01.01.2025*** புதன் அன்று காலை ***06.30*** மணிக்கு திருப்பலி நடைபெறும். காலை **08.00 மணிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன்** அவர்களின் தலைமையில் புத்தாண்டு சிறப்புத் திருப்பலி நடைபெறும். அன்று காலை ***09.30*** மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலி நடைபெறாது. மாறாக, நண்பகல் ***12.00*** மணிக்குப் புத்தாண்டு சிறப்புத் திருப்பலி நடைபெறும்.

அன்று மாலையில் திருப்பலி நடைபெறாது. மாறாக, மாலை ***05.30*** மணிக்கு **நற்கருணை ஆசீரும், திவ்வியபாலன் ஆசீரும்** நடைபெறும்

## 9. முதியோர், நோயாளருக்கு நற்கருணை

***03.01.2025*** தலைவெள்ளி அன்று காலையிலும், மாலையிலும் பங்கின் முதியோர், நோயாளருக்கு நற்கருணை வழங்கப்படும்.

## 10. ஆண்டின் முதல் சனி வழிபாட்டு விபரங்கள்

***04.01.2025*** ஆண்டின் முதல் சனியாக இருப்பதால், காலை ***11.00*** மணிக்கு செபமாலையும், ***11.30*** மணிக்கு சிறப்புத் திருப்பலியும் நடைபெறும். மாலை ***06.30*** மணிக்கு சப்பரப் பவனியும், தொடர்ந்து **நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும்** நடைபெறும்.

## 11. திருக்காட்சிப் பெருவிழா



திருக்காட்சிப் பெருவிழாவான ***05.01.2025*** ஞாயிறு அன்று வழக்கமான திருப்பலிகள் நடைபெறும். மாலை ***06.30*** மணிக்கு **நற்கருணை ஆசீரும், திவ்வியபாலன் ஆசீரும்** நடைபெறும்.

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 6)

## டிசம்பர் - 2024

| | |
|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : **அருள்பணி. பாலன்** |
| களப் பணியாளர் | : **சகோதரர் தினகரன்** |
| பங்கு அலுவலகம் | : 0461 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | ஞாயிற்றுக் கிழமைகளில் |
|---|---|---|
| காலை 5.30, 6.30<br>மாலை 5.30 | காலை 5.30, 6.30 திருப்பலி<br>காலை 11.00 செபமாலை, **நவநாள் திருப்பலி**<br>மாலை 5.30 திருப்பலி<br>மாலை 6.30 செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | காலை **5.00, 6.30, 8.00** திருப்பலி<br>காலை **9.30** ஆங்கிலத் திருப்பலி<br>மாலை **5.30** திருப்பலி<br>மாலை **6.30** செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** திங்கள் முதல் வெள்ளிவரை மாலை 06.15–06.45

சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)

✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).

✓ புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.

✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30

✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்

✓ புதுநன்மை அருள்சாதனம் : 01.01.2025

✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
மாலை 04.00 மணி - 05.30 மணி

✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.

✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

01. அக்டோபர் மாதத்தின் இறுதிநாளான 31.10.2024 வியாழன் மாலை 06.30 மணிக்கு பேராலய வளாகத்தைச் சுற்றி **செபமாலைப் பவனி** நடைபெற்றது. தொடர்ந்து, நற்கருணை ஆசீருடன் செபமாலை மாதம் நிறைவுக்கு வந்தது.

02. நவம்பர் மாதம் முழுவதும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை முதல் திருப்பலி முடிந்த பிறகும், ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் திருப்பலி முடிந்த பிறகும் உத்தரிக்கும் நிலையிலுள்ள ஆன்மாக்களுக்காக **சிலுவைப் பாதை** ஒப்புக்கொடுக்கப் பட்டது.

03. இறந்த நம்பிக்கையாளரின் நினைவு நாளான 02.11.2024 சனிக்கிழமை அன்று காலையில் 05.00, 05.45, 06.30, 07.15 திருப்பலிகள் நடைபெற்றன. மாதத்தின் **முதற் சனிக்கிழமை** என்பதால் **காலை 11.00 மணிக்கு செபமாலை** மற்றும் **நவநாள் திருப்பலி** மட்டும் நடைபெற்றன. வழக்கமாக நடைபெறும் மாலைத் திருப்பலி, நவநாள் வழிபாடு, சப்பரப் பவனி, நற்கருணை ஆசீர் **எதுவும் நடைபெறவில்லை.** அன்றைய நாள் பங்கு அலுவலகத்துக்கும், திருப்பொருள் விற்பனையகத்துக்கும் விடுமுறை.

04. அன்னையின் ஆசியுடன் நமது பேராலயத்தில் பாடகர் குழு அமரும் மேல்தளம் புதுப்பிக்கும் பணி நிறைவடைந்து விட்டது. 06.11.2024 புதன்கிழமை காலை இரண்டாம் திருப்பலி முடிந்தபின் மந்திரிக்கப்பட்டு அன்று மாலைத் திருப்பலி முதல் பாடகர் குழுவினர் மேல் தளத்தில் செயல்பட்டார்கள்.

05. புனித செசிலியாவின் திருவிழாவை முன்னிட்டுப் **பாடகர் குழுவினர், திரைக் குழுவினருக்கான ஒன்றுகூடல்** 17.11.2024 ஞாயிற்றுக்கிழமை இரவு 08.00 மணிக்கு நேவிஸ் அரங்கில் நடைபெற்றது. கலந்து கொண்ட அனைவருக்கும் 2024ஆம் ஆண்டுக்கான நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

06. கிறிஸ்து அரசர் பெருவிழாவை முன்னிட்டு 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையில் தொடர் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அன்பியங்கள் மண்டலங்களாகச் சிறப்பித்தனர்.

07. நமது பேராலயப் பங்கில் கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கம் என்ற பணிக்குழுக்கான கலந்தாய்வுக் கூட்டம் **30.11.2024 சனிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நேவிஸ் அரங்கத்தில்** நடைபெற்றது. பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 15. | கிறிஸ் ஜெஃப்ரீ | ஜெய்சன் - பிரான்சினா | 10.11.2024 | திருச்சிலுவை |
| 16. | சகாய நிவன் | நிரஞ்சன் - சிந்தியா | 17.11.2024 | அன்னை வேளாங்கன்னி |



## ஆசி கூறுகின்றோம்

## 2. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 14. | யோகன் - ஜோஸ்லின் ஆக்னஸ் டேனியலா | பவுலடியார் | 14.11.2024 |



## செபிக்கின்றோம்

## 3. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 16. | சிக்ஸ்டன் கொரைரா | ஜோதி | 01.11.2024 | செபமாலை மாதா |
| 17. | பீட்டர் பர்னாந்து | வசந்தி | 11.11.2024 | சிந்தாத்திரை மாதா |
| 18. | ரீத்தம்மாள் | அலெக்சாண்டர் | 19.11.2024 | ஜூடு |

## நடைபெறவிருப்பவை

★ 03.12.2024 செவ்வாய் கிழமை அன்று **புனித சவேரியார் திருவிழாத் திருப்பலி** காலை 05.30 மணிக்கு புனித சவேரியார் மண்டபத்தில் நடைபெறும்.

★ 06.12.2024 வெள்ளிக்கிழமை அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 07.12.2024 மாதத்தின் **முதல் சனியன்று மாலைத் திருப்பலியும், சப்பரப் பவனியும்,** தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் அன்பு உணவு வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி.

| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 23. | 03.12.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர்; | இரண்டாம் வருகை |
| 24. | 10.12.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆயத்தம் செய்வோம் |
| 25. | 17.12.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | கிறிஸ்து பிறப்பு விழா |
| | 24.12.2024 | செவ்வாய் | | கிறிஸ்துமஸ், புத்தாண்டு |
| | 31.12.2024 | செவ்வாய் | | விடுமுறை |

## விண்ணக வாழ்வின்
# 20ஆம் வருட நினைவு அஞ்சலி

"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே.
என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
(யோவான் 11:25)



தோற்றம்
05.09.1940

மறைவு
23.12.2004

# D. தாமஸ் வாஸ்

வயது : 64

கண்ணீரால் நிஜம் சொல்ல முடியாது
நினைவுகளால் உங்களது வலிமை காண்கின்றோம்.
வாழ்ந்த நாட்கள் இனிய நினைவுகள் ஆகின்றன.
விடைபெற்றாலும் நீங்கள் எங்கள்
இதயத்தில் வாழ்கின்றீர்கள்!

*பிரிவால் வருந்தும்*

*மனைவி :* **எமிலி வாஸ்**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"பயப்படாதே, உன்னை மீட்டுக் கொண்டேன்.
உன்னை பெயர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன்"



மண்ணில்
21.02.1973

விண்ணில்
28.12.2023

## T. சுதாகர் மிஸியர்

**வயது : 51**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உன் முகம்
எந்நாளும் உயிர் வாழும்!

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எங்களை விட்டு மறைந்தாலும்
நாங்கள் நினைத்தவுடன்...
கண்களில் இருப்பீர்கள் கண்ணீராக...

*என்றும் உங்கள் நினைவில் வாழும்*

மனைவி :
**S. மெரினா பர்னாந்து**
மற்றும் **பிள்ளைகள்**
திரேஸ்புரம், தூத்துக்குடி

விண்ணக வாழ்வின்

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்வேன்"
(எரேமியா 40:4)



மலர்ந்தது
26.05.1948

உதிர்ந்தது
14.12.2022

## A. ரஞ்சிதம் பர்னாண்டோ

வயது : 76

அன்பிலே எங்களை அரவணைத்தீர்கள்.
ஆற்றலுடன் வழி நடத்தினீர்கள்.
உழைப்பிலே உயர்ந்து நின்றீர்கள் – இன்று
எம்மைப் பிரிந்து மீட்பருடன் இணைந்து விட்டீர்கள்.
என்றும் எம் நெஞ்சங்களில் வாழ்கின்றீர்கள்.

மறைந்த போதிலும்
நினைத்துக் கொண்டிருக்கும்.....
**குடும்பத்தினர்**

# IN LOVING MEMORY OF MY PARENTS



**CHELLAM CARDOZA**

**BLOOMED** 09/01/1938 **WITHERED** 13/12/2013

**JOTHI FERNANDO**

**BLOOMED** 17/06/1944 **WITHERED** 23/02/2023

YEARS ARE OVER ,SINCE YOU PASSED AWAY
THE WAY I MISS YOU IS DIFFERENT NOW
I HOPE YOU KNOW HOW MUCH YOU MEANT TO US
I STILL THINK ABOUT YOU EVERYDAY
I JUST LOVE AND MISSED YOU
IN MY OWN SPECIAL WAY.

**There will be a Requiem Mass for the soul of my beloved parents @6:30am on 13th Dec 2024@ OLS Basilica.**

**Fondly remembered and forever missed by Rajesh Cardoza & Family..**

SHINY Ph : 98421 31493